

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் உள்ள நாசரேத் கல்லூரியில் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் போட்டிகளை துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களை பாராட்டி பதக்கம் மற்றும் கேடயங்களை வழங்கினார் ஆட்சியர் மு.பிரதாப், மேயர் கு.உதயகுமார், அலுவலர் சீனிவாசன், கல்லூரி செயலாளர் ஹென்றி மாரிஸ், கல்லூரி முதல்வர் மேரி ஏஞ்சலின் சந்தோஷம், கே.ஜெ.ரமேஷ், சன்பிரகாஷ், பொன். விஜயன், பெ.வினோத், வி.சிங்காரம், உள்பட மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர் வீராங்கனைகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில பொதுக்குழு கூட்டம் தி.நகர் தக்கர் பாபா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி மாநில தலைவர் ரெ. தங்கம், கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கிடும் எண்ணற்ற திட்டங்கள் மற்றும் வரும் சட்டமன்றத் தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் மாற்றுத்திறனாளிகள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவார்கள் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களை விளக்கி உரையாற்றினார். இதில் 400க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு! கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கந்தல் சேகரிப்பாளர்களுக்கு

# புது வாழ்வுத் திட்டமாக தனியார் நிறுவனத்தில் பணி! பயனாளிகள் முதல்வருக்கு நன்றி!

## மேயர் ஆர்.பிரியா நலஉதவிகள் வழங்கினார்!

சென்னை, அக்.9-

பெருநகர சென்னை மாநகராட்சி கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் உள்ள 128 கந்தல் சேகரிப்பாளர்களுக்கு புது வாழ்வுத் திட்டமாக தனியார் நிறுவனத்தில் பணி நியமன ஆணைகளையும், பாதுகாப்பு நல தொகுப்புகளையும், மாநகராட்சியின் சார்பில் நலத்திட்ட உதவிகளுக்கான தொகுப்புகளையும் மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (08.10.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கந்தல் சேகரித்து வரும் 308 நபர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு புது வாழ்வுத் திட்டமாக, புதிய பணிக்கு விருப்பம் தெரிவித்த கந்தல் சேகரிப்பாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தில் இருந்து 128 நபர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்த நிறுவனமான என்விரோ சொல்யூசன்ஸ் நிறுவனத்தில் பணிபுரிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி, 128 கந்தல் சேகரிப்பாளர்களுக்கு மின்கல வாகன ஓட்டுநர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களாக இந்நிறுவனத்தில் பணிபுரிய பணி நியமன ஆணைகள் இன்று வழங்கப்பட்டுள்ளது.

இப்பணியில் சேர்ந்துள்ள இவர்களுக்கு மாத ஊதியமாக ரூ.19,786/ கிடைத்திடும். மேலும், இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, விபத்தில் இறந்தவர்களுக்கான உதவித்தொகை, தாட்கோ நிறுவனம் உள்ளிட்ட காப்பீட்டு உதவித் தொகைகள், வார விடுமுறை, மாதம் ஒரு முறை தற்செயல் விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பு, தேசிய விடுமுறை மற்றும் தேசிய விடுமுறை நாட்களில் பணிபுரியும் போது இரட்டிப்பு ஊதியம், போனஸ், பி.எஃப். மற்றும் இ.எஸ்.ஐ., கருணைத் தொகை உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்படும்.

இன்று பணி நியமன ஆணைகள் பெற்ற பயனாளிகளின் சார்பில் ஜெயந்தி, ஆனந்த், குகவள்ளி, லோகநாயகி ஆகியோர் பணிநியமன ஆணைகள் வழங்கியதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாநகராட்சி நிருவாகத்திற்கும் தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்தனர்.

இந்நிகழ்வின் தொடர்ச்சியாக, மேயர் கந்தல் சேகரிப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஏற்பாடு செய்யப்பட்ட உணவு விருந்தில் பங்கேற்று அவர்களுடன் உணவு உட்கொண்டார்.

**(பயனாளிகளின் பேட்டி)**

**பயனாளி - 1 ஜெயந்தி**



கொடுங்கையூர் குப்பை கிடங்கில் கந்தல் சேகரிக்கும் என்னை போன்றவர்களுக்கு வேலை கொடுங்கள், அவர்களின் தேவைகளை நிறைவேற்றுங்கள், இந்த குப்பையிலிருந்து வெளியேறி விடுவார்கள் என்று சொன்னோம். ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை இல்லாமல் இருக்கிறோம். எங்களுக்கு இவைகளை வழங்குங்கள் என்றும் சொன்னோம். தமிழ்நாடு முதலமைச்சர் இப்போது அனைத்து தேவைகளையும் நிவர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இன்னும் மேலும் மேலும் நமக்கு உதவி செய்வார்கள். கந்தல் சேகரிக்கும் எல்லோருக்கும் உதவி செய்வதாக கூறியிருக்கிறார்கள். நாங்கள் எவ்வளவு காலமாக அந்த இடத்தில் கை, காலை அறுத்துக் கொண்டு கஷ்டப்பட்டோம். தற்போது இந்த வேலை வழங்கி இந்த நிலைக்கு வருவதற்கு காரணமே நம்முடைய தமிழ்நாடு அரசு தான் இந்தளவிற்கு நமக்கு உதவி செய்து தற்போது வேலை வழங்கியுள்ளார்கள். இந்த வேலையை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.


**பயனாளி - 2 ஆனந்த்**



(கந்தல் சேகரிப்பாளர் குடும்பத்தில் இருந்து படித்து தற்போது வழக்கறிஞராக பணியாற்றுபவர்)

இந்த கந்தல் சேகரிப்பாளர் குடும்பத்திலிருந்து தான் நான் வந்திருக்கிறேன். நான் இன்று ஒரு வக்கீல். 1980ல் இந்த குப்பை கொட்டும் வளாகம் உருவாகி, 85லிருந்து இங்கு குப்பை கொட்டப்பட்டு வருகிறது. தற்போது இந்த அரசு தான் அவர்களை அடையாளப்படுத்தி அவர்களுக்கென்று ஒரு வேலை வாய்ப்பை உருவாக்கி அவர்களுக்கு ஒரு தனித்துவத்தை உருவாக்கி கொடுத்துள்ளார்கள். இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இதை முழுவதுமாக எடுத்து வந்த மேயர் அவர்களுக்கும், கமிஷனர் அவர்களுக்கும் எங்களது மொத்த கந்தல் சேகரிப்பாளர்கள் சார்பாக எங்களது மனமார்ந்த நன்றிகள் எனத் தெரிவித்தார்.

**பயனாளி - 3 லோகநாயகி**



எங்களையும் ஒரு மனிதராக மதித்து, இதுவரை எங்களுக்கு யாரும் இதுபோல முன்வந்து எந்த உதவியும் செய்யல, நாங்க எவ்வளவு நாள் கஷ்டப்பட்டோம். எங்களுக்கு ஒன்னுமே இல்லை என்று முடிவு செய்திருக்கிறோம். இந்த அரசுக்கு நன்றி, எவ்வளவோ நலத்திட்ட உதவிகள் செய்திருக்கிறார்கள். இன்னமும் செய்வோம் என்று சொல்லியுள்ளார்கள். இந்த திட்டத்தை நிறைவேற்றினதற்காக ரொம்ப நன்றி எனத் தெரிவித்தார்.

**பயனாளி 4 குகவள்ளி (கந்தல் சேகரிப்பாளர்)**



முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேயர், துணை மேயர், கமிஷனர் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் நன்றி, நாங்கள் பல ஆண்டு காலமாக இந்த குப்பை மேட்டில் குப்பை பொறுக்கிக் கொண்டு, அதைக் கொண்டு வாழ்ந்து வந்தோம். ஆனால் இதுவரைக்கும் எந்த அரசும் எங்களுக்கு ஒரு அடையாளமாக இதுபோன்ற வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தரவில்லை. ஆனால் இந்த தமிழ்நாடு அரசு தற்போது எங்களுக்கு சகோதரி மேயர், துணை மேயர் மற்றும் கமிஷனர் மூலமாக எங்களுக்கு இந்த புதிய வாழ்வு திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் சாகும் வரை இந்த திட்டத்தை பயன்படுத்தி சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு எந்தக் காலத்திலும் மறக்க மாட்டோம். தமிழ்நாடு அரசை மறக்க மாட்டோம். இங்கு பலபேர் மழைக்காலத்திலும் வீடு வாசல் இல்லாமல் இருக்கிறார்கள். காலம் காலமாக குப்பை பொறுக்கி சாப்பிட்டு கொண்டிருந்தோம், குழந்தைகளுடன் கஷ்டப்பட்டு கொண்டிருந்தோம். ஒரு அடையாளம் இல்லாமல் இருந்தோம். இந்த தமிழ்நாடு அரசு எல்லாவற்றையும் எங்களுக்கு செய்துள்ளார்கள். இந்த திட்டத்தை ஏற்படுத்தி கொடுத்த தமிழ்நாடு அரசினை நாங்கள் எப்போதும் மறக்க மாட்டோம். உயிருள்ள வரை நாங்கள் மறக்க மாட்டோம். இதனை ஏற்படுத்தி கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மேயர், துணை மேயர் அவர்களுக்கும், கமிஷனர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி எனத் தெரிவித்தார்.



கும்மிடிப்பூண்டி ஒன்றியம், பன்பாக்கம், ஏ.என்.குப்பம், புதுவாயல், பெருவாயல் ஆகிய ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் கி.வே.ஆனந்தகுமார். கே.ஜி. நமச்சிவாயம், மு.பாஸ்கர், மு.வேதாச்சாலம், மு.கேசவன், எஸ்.ராமஜெயம், கே.வி.நாகராஜ். அ.மனோகரன், பி. சுரேஷ். எம்.அருள், ஜோதி, மணிகண்டன், கோபி, பாலசண்முகம், தங்கதுரை, தமிழ்சாதிக், யு.கஜேந்திரன், அர்ஜீனன், சிவா,தணிகைவேல், கோவிந்தன், சேகர், ரமேஷ், லோகேஷ். வேலன். பாலாஜி, சதீஷ், அலுவலர் அமிழ்தமன்னன் உள்ளனர்.

# கரூர் துயரச் சம்பவம்: 45 பேரின் வீடுகளுக்குச் சென்று நிதி உதவி!

## முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், அக். 9 -

கரூர் த.வெ.க. கூட்டத் தில் காயம் அடைந்த 45 நபர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று முதல மைச்சரின் பொது நிவாரண நிதியை கரூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, கரூர் மாவட்ட கலெக்டருடன் சென்று வழங்கினார்.





கரூர் வேலுச்சாமிபுரம் விஜய் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் மயக்கம் அடைந்து 41 பேர் இறந்தனர். இந்த சம்பவத்தை அடுத்து யாருக்கும் ஆறுதல் கூற விஜய் வரவில்லை. அறிவித்த நிவாரண உதவி தொகையையும் வழங்கவில்லை. அடுத்த கட்ட தலைவர்கள் கைதுக்கு பயந்து தலைமறைவாகி விட்டனர்.

இந்த சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்துள்ளனர். 110 பேர் காயம் அடைந்தனர். உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு தலா ரூ. 10 லட்சம், காயமடைந்த குடும்பத்திற்கு தலா ரூ.1லட்சமும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டு வருகிறது. சம்பவம் நடந்தவுடன் இதை கேள்விப்பட்டு உடனடியாக கரூர் அரசு மருத்துவமனைக்கு வந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறிய பின்னர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இதனை அறிவித்தார்கள்.

கரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட காமராஜபுரம், எல்ஜிபி நகர், அண்ணாநகர், உழவர் சந்தை, ராயனூர் முகாம், சுக்கா லியூர், கோடங்கிபட்டி, காளியப்பனூர், தாந்தோணிமலை, அம்மன் நகர், கொளந்தானூர், பசுபதிபாளையம், தெற்கு, கருப்பாயி கோயில் தெரு, ஐந்துரோடு, வஉசி தெரு,வெங்கமேடு, அரசு காலணி, மின்னா ம் பள்ளி, திருமுக்கூட லூர், சோமூர், நெரூர் வடக்கு, முனியப்பனூர், குப்பிச்சி பாளையம், ஓடையூர், காதப்பாறை, திட்ட ச்சாலை, வெங்கமேடு, சிவலிங்க ஆசாரியர் தெரு, ஜோதிடர் தெரு, பெரிய குளத்து பாளையம், வேலுச்சாமிபுரம், பெரிய கோதூர், காயத்ரி நகர்,, வடமலை கவுண்டனூர், ஆத்தூர் பிரிவு, ஆண்டாங்கோவில் மேற்கு, ஆண்டாங்கோவில் கிழக்கு, வடிவேல் நகர் ஆகிய பகுதிகளில் நெரிசலில் சிக்கி காயமடைந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பிய வர்களை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட் டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி நேரில் சந்தித்தார்.

45 நபர்களை சந்தித்து நலம் விசாரித்து முதலமைச்சர் பொது நிவாரண நிதியை வழங்கினார்.

கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், கரூர் மாநகர செயலாளர் எஸ்பி. கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், பகுதி கழக செயலாளர்கள் க. சுப்பிரமணியன், ஆர்எஸ்.ராஜா, ஆர்.ஜோதிபாசு, விஜிஎஸ் குமார், வெங்கமேடு பாண்டியன், மாவட்டத் துணைச் செயலாளர் எம்எஸ்கே. கருணாநிதி, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் விஜயகுமார், ஒன்றிய செயலாளர்கள் முத்துக் குமார், கோயம்பள்ளி பாஸ்கரன், விகே. வேலுசாமி, மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உடன் சென்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. இராசேந்திரன்

**அக்டோபர் 9 (2023)**



தனது இளம் பருவத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கி, 1970 முதல் 2002 வரையிலான 32 ஆண்டுகள் தொடர்ந்து சேத்துப்பட்டு ஒன்றியச் செயலாளர், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினர், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவர் என பல பொறுப்புகள் வகித்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தச்சம்பாடி ஊராட்சி மன்ற தலைவர், போளூர் வீட்டு வசதி வாரிய சங்க தலைவர், பால் கூட்டுறவு சங்க தலைவர் என பல பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.கே. சீனிவாசன்

**அக்டோபர் 9 (1989)**



கழகத் தோழர்களால் 'தத்துவ மேதை' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.

ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கழகம் ஆகியவற்றில் உறுப்பினர். தி.மு.கழகம் தோன்றிய ஆரம்ப நாள் முதல் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.

சிறுகதை எழுத்தாளர். கழகம் நடத்திய மாநாடுகளில் தலைமையேற்றும் – திறந்து வைத்தும் இருக்கிறார்.

1962 விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் மூன்று மாத சிறைத் தண்டனை பெற்றவர்.

1970 முதல் 1976 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும், மாநிலங்களவைக்குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**